1990 மார்ச் 29]

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டி தொழிற்பேட்டையில் சிறு தொழில்களை நடத்திக்கொண்டிருக்கிற தொழிலதிபர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில் அந்தத் தொழிற்கூடங்களுக்கு அருகாமையில் காலியாக இருக்கிற இடங்களை அந்தத்தொழிலை விரிவு செய்கின்ற வகையில் இடம் கேட்டால் அரசு கொடுக்கத் தயாராக இருக்கிறதா என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தொழிற்கூடங்களுக்கு அருகில் காலியான இடங்கள் இருக்குமேயானால் சம்பந்தப்பட்ட தொழிலதிபர்கள் அந்த நிலம் வேண்டுமென்று விண்ணப்பம் செய்தால் அரசு பரிசீலித்து அவர்களுக்கு அந்த நிலங்களைத் தற்பொழுது ஒதுக்கிக்கொண்டிருக்கிறது. மேலும் நிலம் ஒதுக்குவதற்கான விண்ணப்பங்கள் வந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. சி. சண்முகம் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டி தொழிற்பேட்டையில் முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்திலே ஒரு பெருத்த அளவிலே இடத்தை இந்த இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுக்காக ஒதுக்கப்பட்டு ஆக்கிரமிப்பு செய்து நோட்டிபிகேஷன் போடப்பட்டுள்ளது. ஆனால் இது வரையில் அதில் பெரும்பகுதியை ஆக்கிரமிப்புசெய்து வீடுகள் பிளான் இல்லாமல் கட்டப்படுகிறதை பார்த்து, அரசு நடவடிக்கையெடுத்து அதனை தொழில் பேட்டைக்கு ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-10 மணி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கிண்டி தொழிற்பேட்டையில் கூடுதல் தொழில் கூடங்கள் கட்டப்படுமா என்பதைப் பற்றியதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடுவார்களேயானால் இது குறித்து விரிவான விளக்கத்தைத் தர இயலும்.

குடிநீர் தட்டுப்பாடு.

* 392—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரை பேரூராட்சிக்குட்பட்ட சிலோன் காலனி மக்களின் குடிநீர் பஞ்சத்தை போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வருகிற நிதியாண்டில் கூடுதல் ஆழ்துளை குழாய்க் கிணறு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, ஊத்தங்கரை சிலோன் காலனியின் குடிநீர்த் திட்டம் என்பது கூட்டுறவு நூற்பாலையின் தண்ணீர் திட்டமுடன் இணைந்த ஒரு திட்டம். அந்த நூற்பாலையின் துவக்க காலத்திலிருந்து வரும் ஒரு திட்டம். அந்தத் திட்டம் தான் பம்பையாறு அணைக்கட்டு நீர்பிடிப்பு பகுதியில் ஒரு ஆழ்துளை குழாய் கிணறு தோண்டி தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய பூர்வாங்க திட்டம். அந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இதுகுறித்து ஒவ்வொரு மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்களுடனும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரி களுடனும், மாலை நேரத்தில் பேசுவதற்காக முடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த நேரத்தில் இதுபற்றி குறிப்பிடு வார்களானால் அதுகுறித்த முயற்சிகளை இந்த அரசு மேற் கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை காலா காலத்தில் அமல்படுத்தாதன் விளைவு அந்த மில்லுக்கு வேண்டிய தண்ணீரை நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் செலவழித்து கொண்டு வரவேண்டியிருக்கிறது. அப்படி செலவழித்தும் கூட அந்தத் தொழிலாளர்களுக்கு கை கழுவவும், பாத்திரம் கழுவவும் கூட போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. சிலோன் காலனி மக்கள் இன்னல்பட்டு வெளியே உள்ள இடங் களிலிருந்து தண்ணீரை எடுத்து வர அவதிபடுகிறார்கள். ஆகவே, இதை அரசு துரிதமாக பரிசீலனை செய்தும் ஆலை நிர்வாகம் தண்ணீர் கொண்டுவர ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படு வதையும் கருத்திற்கொண்டு, இந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, அரசு நிச்சயமாக அதுகுறித்து பரிசீலிக்கும்.